1972 மார்ச் 11]

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிற திட்டத்தின் கீழ் எல்.ஐ.சி. மூலமாக நிதி உதவி பெறுவது பற்றிப் பரிசீலனை முடிந்து முடிவு எடுக்கப்பட்ட பிறகு இவை எல்லாம் நிச்சயமாக கவனிக்கப்படும்.

**மேட்டூரிலுள்ள அலுமினியம் கம்பெனிக்குச் சொந்தமான நிலம்.**

*438. **வினா—திரு. எம் சுரேந்திரன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மேட்டூரில் உள்ள மதராஸ் அலுமினியம் தொழிற்சாலைக்கு, நில உச்சவரம்பு சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அவ்வாறு அனுமதிக்கப்பட்டிருக்கும் நில விஸ்திரணம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) :** தி மதராஸ், அலுமினியம் கம்பெனி, மேட்டூர் வட்டத்தில் தனக்குச் சொந்தமான 659.06 ஏக்கர் நிலம் குறித்து தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (சட்டம் எண். 58/1961) 73 (iv) பிரிவின்கீழ் விலக்கு அளிக்க வேண்டுமென்று 15-7-71 அன்று அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மேட்டூரில் இருக்கக்கூடிய அலுமினியம் தொழிற்சாலையின் பேரில் இருக்கக்கூடிய, ஒதுக்கப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அவர்களுக்கு மொத்தமாக இருக்கும் நிலம், அடமானம் செய்த நிலம் ஹோல்டிங்க்ஸ் என்ற முறையில் 390 ஏக்கர் 82 செண்ட் ஆகும். இது தவிர புறம்போக்கு நிலத்தையும் அவர்கள் ஆக்கிரமித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் அது பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : What is the extent of land which is exactly required for the Aluminium Factory? Has the Government gone into the question?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எவ்வளவு நிலம் தேவை என்பதைப் பொறுத்தவரை நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்தபோது இவற்றுக்கெல்லாம் விதிவிலக்கு வைத்திருக்கிறோம். சட்டம் அமலாக்கப்பட்ட நேரத்தில் ஒரு கம்பெனிக்கு எவ்வளவு நிலம் இருக்கிறதோ அதை எடுப்பதில்லை என்ற விதி இருக்கிறது. அந்த விதியின்கீழ் இப்போது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கும் நிலத்திற்கு எக்ஸம்ப்ஷன் கேட்டு அவர்கள் அப்பீல் செய்து கொண்டிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. ஒரு கம்பெனிக்கு எவ்வளவு நிலம் இருக்க வேண்டுமென்ற அந்த உச்ச வரம்பைக் குறைக்க தனிச் சட்டம் கொண்டு வர அரசு ஆலோசித்து வருகிறது.

**திரு. கே. கந்தசாமி:** இந்தக் கம்பெனிக்கு மின்சாரச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டிய கேள்வி இது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: When the Government propose to bring a legislation for limiting the extent of land which should be allowed for such factories, would they take into consideration the future expansion also? If so, what is the time limit which they would like to take?

THE HON. THIRU P. U. SHANMUGAM: Precisely that is what is under the consideration of the Government.

**திரு. ஏ. எம். இராஜா:** மேட்டூர் அலுமினியம் தொழிற் சாலைக்கு 659 ஏக்கர் நிலம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலே தொழிற்சாலைக்குப் போக பாக்கி இருக்கும் நிலத்திலே அங்கு வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள நிலம் கேட்டால் இலவசமாக அந்த நிலத்தைக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு அந்தத் தொழிற்சாலை நிர்வாகிகளை வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அவர்கள் எக்ஸம்ப்ஷன் கேட்டிருப்பது 659 ஏக்கர் என்று தெரிவித்தேன். அவர்களுக்கு உரிமை 390 ஏக்கர்தான். பாக்கி புறம்போக்கு நிலத்தைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். அதைப் பற்றிப் பரிசீலனை

1972 மார்ச் 11]

செய்யப்பட்டு வருகிறது. பாக்கி விவரங்களுக்கு தொழிலாளர் நல அமைச்சருக்குக் கேள்வி போட்டால் பதில் சொல்லுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : கேள்வி எண்கள் 439, 440 ஆகியவை தொழில்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

## *Bridges*

* 441 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there are proposals under the consideration of the Government to construct a bridge at Gnanamala Kadavu across Kuzhithurai river in Kanyakumari district?

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா** : இல்லை.

**திரு. என். டென்னிஸ்** : இந்தப் பாலத்தை அமைப்பதன் மூலம் மார்த்தாண்டம் பகுதியிலுள்ள முக்கிய ஊர்களைத் தொடர்பு படுத்தும் என்ற வகையில் அந்த ஊர் மக்கள் நீண்ட காலமாக வற்புறுத்தி வரும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : இந்தப் பாலம் கட்ட 20 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகலாம் என்று கருதப் படுகிறது. அதற்கு தற்போது நிதிநிலை வசதி இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : திரு. ரா. ரா. முனுசாமி . . இது கன்னியாகுமரியைப் பற்றிய கேள்வி.

**திரு. ரா. ரா. முனுசாமி** : கன்னியாகுமரியில் இருப்பது போன்று தமிழ் நாட்டில் இருக்கின்ற முக்கியமான ஊராட்சி மன்றங்களில் நிதி வசதியைக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது பெரிய பெரிய நீர் ஓடைகள் இருக்கின்ற நிலையில் ஊருக்கு ஊர் தொடர்பு ஏற்படுத்த நிதிவசதி இல்லாத நிலையில் 40,000, 50,000 ரூபாய்க்கு மேற்பட்ட பாலம் கட்டும் திட்டங்களை அரசு எடுத்து நிறைவேற்றித் தர முன்வருமா?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா** : கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பரிந்து பேசியதற்காக நன்றி.